ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 29.09.2015

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2015 யூலை

### பொதுநோக்கு

2015 யூலையில் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் ஆண்டிற்காண்டு அடிப்படையில் குறைந்த வர்த்தகப் பற்றாக்குறை மற்றும் வலுவான சுற்றுலாப் பயணிகளின் வருவாய்களுடன் சேர்ந்து மேம்பாடடைந்தது. யூலையில் அதிகரித்த ஒன்று சேர்த்த வர்த்தகப் பற்றாக்குறை யூனில் பதிவு செய்யப்பட்ட 15.6 சதவீதத்திலிருந்து குறைவடைந்து 6 சதவீதத்தில் காணப்பட்டமைக்கு 2015 யூலை மாத காலப்பகுதியில் இறக்குமதிகளில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியே காரணமாகும். நிதியியல் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் மெதுவடைந்து காணப்பட்டன. 2015 செத்தெம்பர் 04ஆம் நாளிலிருந்து செலவாணி வீதத்தினைத் தீர்மானித்தலில் அதிகளவான நெகிழ்ச்சியினை அனுமதிப்பது என்ற மத்திய வங்கியின் தீர்மானம் வர்த்தகப் பற்றாக்குறையினை மேலும் குறைப்பதற்கு உதவும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளையில் நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மேம்பாடடைந்து வெளிநாட்டுத் துறையின் உறுதித்தன்மைக்கு வழிவகுக்கும்.

### ஏற்றுமதிச் செயலாற்றம்

2015 யூலையில் ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 932 மில்லியனுக்கு 2.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து கைத்தொழில் மற்றும் வேளாண்மை இரண்டிலும் ஏற்பட்ட ஆண்டிற்காண்டு அடிப்படையிலான வீழ்ச்சியினைப் பிரதிபலிக்கின்றன. 2015 யூலையில் போக்குவரத்துச் சாதனங்கள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் விலங்குத் தீன் தவிர்ந்த அனைத்து கைத்தொழில் துறையின் அனைத்து துணை வகைகளின் ஏற்றுமதிகள், நலிவடைந்த உலக கேள்வி மற்றும் ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பவற்றின் காரணமாக வீழ்ச்சியடைந்தன. 2015 யூலையில் கைத்தொழில் ஏற்றுமதிகளில், மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 44 சதவீதத்திற்கும் மேலாக வகைகூறும் புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்காண்டு அடிப்படையில் 0.3 சதவீதத்தினால்

சிறிதளவில் வீழ்ச்சியடைந்தன. இதற்கு 2014 யூலையில் புடவை ஏற்றுமதிகள் 34.0 சதவீத வளர்ச்சியினைப் பதிவு செய்திருந்த போதிலும் ஆடைகளின் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். எனினும், ஆடை ஏற்றுமதிகள் 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ஐரோப்பிய சந்தைக்கான ஆடை ஏற்றுமதிகளில் கணிசமானளவு வீழ்ச்சியினைப் பிரதிபலித்தன. அதேவேளை, இறப்பர் உற்பத்திகள், இரத்தினக்கற்கள், வைரம் மற்றும் ஆபரணங்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் என்பவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமை முக்கிய கைத்தொழில் ஏற்றுமதிகளின் ஒட்டு மொத்த வீழ்ச்சிக்குப் பங்களித்தன. 2015 யூலையில் போக்குவரத்து சாதனங்கள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் விலங்குத் தீவனம் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் முறையே 91.3 சதவீதம், 42.2 சதவீதம் மற்றும் 13.0 சதவீதத்தினால் அதிகரித்தன.

வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2015 யூலையில் ஆண்டிற்காண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 245 மில்லியனுக்கு 2.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தேயிலை மற்றும் கடலுணவு ஏற்றுமதிகளில் பதிவு செய்யப்பட்ட கணிசமானளவு வீழ்ச்சியே வழிவகுத்தது. ருசியா மற்றும் மத்திய கிழக்கிலிருந்தான குறைந்த கேள்வியினால் கடுமையாகப் பாதிப்படைந்த தேயிலை ஏற்றுமதிகள் 2015 யூலையில் 12ஆவது தொடர்ச்சியான மாதமாக வீழ்ச்சியடைந்து ஆண்டிற்காண்டு அடிப்படையில் 14.0 சதவீத வீழ்ச்சியினைப் பதிவுசெய்து ஏற்றுமதி அளவு மற்றும் ஏற்றுமதி விலைகள் இரண்டினதும் வீழ்ச்சியினைப் பிரதிபலிக்கிறது. ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான சந்தை அணுகுவதில் காணப்பட்ட கட்டுப்பாடுகளினால் கடலுணவிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தன. இதன்படி, ஐரோப்பிய ஒன்றிய பிராந்தியங்களிற்கான கடலுணவு ஏற்றுமதிகள் 71.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 2015 யூலையில் கடலுணவு வகையில் ஆண்டிற்காண்டு அடிப்படையில் 32.5 சதவீத ஒட்டுமொத்த வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. எனினும், வாசனைத் திரவியங்கள், சிறுவேளாண்மை உற்பத்திகள் மற்றும் தேங்காய் உள்ளீட்டு உற்பத்திகள் என்பவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் சாதகமான வளர்ச்சியினைப் பதிவுசெய்து வேளாண்மை ஏற்றுமதிகளின் ஒட்டுமொத்த வீழ்ச்சியினை பகுதியளவில் எதிரீடுசெய்தன.

ஒன்றுசேர்த்த அடிப்படையில் ஆண்டின் முதல் ஒன்பதுமாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 0.9 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு கைத்தொழில் ஏற்றுமதிகளின் சாதகமான வளர்ச்சிக்கு மத்தியிலும் வேளாண்மைத் துறை ஏற்றுமதிகளின் குறைவான செயலாற்றமே முக்கிய காரணமாகும். இக்காலப்பகுதியில் இலங்கையின் வணிகப் பொருள் ஏற்றுமதிகளிற்கான முன்னணி சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி, இத்தாலி மற்றும் சீனா ஆகிய நாடுகள் விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 55 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 1 – ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள்**

| வகை | யூலை 2014 (ஐ.அ.டொ. மில்) | யூலை 2015 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சனவரி-யூலை 2014 (ஐ.அ.டொ. மில்) | சனவரி-யூலை 2015 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **700.9** | **682.4** | **(2.6)** | **4,742.0** | **4,827.8** | **1.8** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 414.5 | 413.1 | (0.3) | 2,827.4 | 2,818.5 | (0.3) |
| இறப்பர் உற்பத்திகள் | 79.7 | 71.8 | (9.9) | 516.6 | 469.8 | (9.1) |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 31.4 | 23.7 | (24.5) | 231.3 | 196.5 | (15.1) |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 32.6 | 27.1 | (16.8) | 192.4 | 177.9 | (7.5) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 3.7 | 7.1 | 91.3 | 65.7 | 215.1 | 227.2 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 28.2 | 40.1 | 42.2 | 212.5 | 264.1 | 24.3 |
| உணவு குடிவகைகள் மற்றும் புகையிலை | 22.6 | 22.5 | (0.2) | 166.5 | 155.8 | (6.4) |
| ஏனையவை | 88.3 | 76.9 | (12.9) | 529.5 | 530.0 | 0.1 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **252.2** | **245.3** | **(2.7)** | **1,608.9** | **1,490.1** | **(7.4)** |
| தேயிலை | 147.2 | 126.5 | (14.0) | 944.2 | 809.4 | (14.3) |
| தேங்காய் | 34.6 | 34.3 | (0.8) | 198.8 | 208.5 | 4.9 |
| கடலுணவு | 22.4 | 15.1 | (32.5) | 156.6 | 100.9 | (35.5) |
| வாசனைத்திரவியம் | 26.9 | 48.5 | 80.0 | 136.9 | 219.2 | 60.1 |
| ஏனையவை | 21.1 | 20.9 | (1.0) | 172.4 | 151.9 | (11.9) |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **3.5** | **4.4** | **25.1** | **55.6** | **29.7** | **(46.6)** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **956.6** | **932.1** | **(2.6)** | **6,406.5** | **6,347.6** | **(0.9)** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி


**இறக்குமதிச் செயலாற்றம்**


2015 யூலையில் இறக்குமதிகள் மீதான செலவினம், ஆண்டிற்காண்டு அடிப்படையில்; ஐ.அ.டொலர் 1,534 மில்லியனுக்கு 16.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு 2012 நவெம்பருக்குப் பின்னர் 2014 யூலையில் அதிகூடிய மாதாந்த இறக்குமதிப் பெறுமதி பதிவு செய்யப்பட்டமையின் தளவிளைவே காரணமாகும். மேலும், இறக்குமதி செலவினத்தின் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு எரிபொருள் இறக்குமதி உண்டியலின் வீழ்ச்சியும் பங்களித்தது. இம்மாதகாலப்பகுதியில் எரிபொருள் இறக்குமதிகள் மீதான இறக்குமதிச் செலவினம் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 66.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2014 யூலையில் ஐ.அ.டொலர் 116.3ஆகக் காணப்பட்ட பீப்பாய் ஒன்றிற்கான சராசரி மசகு எண்ணெய் இறக்குமதி விலை 2015 யூலையில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 60.5ஆக அரைவாசியாகியது. இதன் காரணமாக, 2015 யூலையில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஆண்டிற்காண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 752 மில்லியனுக்கு 32.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அடிப்படை உலோகங்கள், வளமாக்கிகள், புடவை மற்றும் புடவைப் பொருட்கள் என்பவற்றின் மீதான இறக்குமதி செலவினமும் இம்மாதகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

எனினும், பெறுமதி மற்றும் அளவு ஆகிய இரண்டு நியதிகளிலும் அதிகரித்த தனிப்பட்ட உந்து ஊர்திகள் மற்றும் சரக்குஊர்திகள், இழுவைப்பொறிகள் போன்ற ஊர்திகளின் இறக்குமதி என்பன முறையே நுகர்வுப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களின் அதிகரிப்பிற்கு பங்களித்தன. இதன் காரணமாக நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 415 மில்லியனுக்கு 14.8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 366 மில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தன. எனினும், பால் உற்பத்திகள், ஆடை மற்றும் அணிகலன்கள், சீனி மற்றும் இனிப்புப்பண்டம் போன்ற நுகர்வுப் பொருட்கள் மற்றும் பொறிகள் மற்றும் சாதனங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2015 யூலையில் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தன.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2015இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில், இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு மத்தியிலும் இறக்குமதிகள் மீதான செலவினம் ஆண்டிற்காண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 11,035 மில்லியனுக்கு 1.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளே வழிவகுத்தன. 2015இன் முதல் ஏழு மாதகாலப்பகுதியில், முக்கிய இறக்குமதி மூலங்களாக இந்தியா, சீனா, யப்பான், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 60 சதவீதத்திற்கு வகைகூறின.

**வரைபடம் 1: ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம்**




மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை மத்திய வங்கி.

**வர்த்தக மீதி**

2015 யூலையில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறையானது 2014 யூலையின் ஐ.அ.டொலர் 889 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 602 மில்லியனுக்கு 32.3 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. இருப்பினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2015இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 4,688 மில்லியனுக்கு 6.0 சதவீதத்தினால் அதிகரித்தது.

**சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள்**

2015 ஓகத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 166,610 ஆக விளங்கி இம்மாதத்தில் 18.7 சதவீத வளர்ச்சியை பிரதிபலித்ததன் மூலம் அதன் உத்வேக வளர்ச்சியை தொடர்ந்தது. ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 2014ஆம் இதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 17.1 சதவீத வளர்ச்சியைக் காட்டி 1,172,465ஆக விளங்கியது. சுற்றுலாப் பயணிகள் வருகைகளின் முக்கிய பத்து மூல நாடுகளில் ருசியாவைத் தவிர ஏனையவை சாதக வளர்ச்சியை பதிவு செய்தன. இவ்வாண்டின் ஓகத்து வரை சீன மற்றும் இந்திய சுற்றுலாப்பயணிகளின் வருகைகள் முறையே 76.8 சதவீதம் மற்றும் 27.9 சதவீதம் வளர்ச்சியைக் கொண்டிருந்தமையின் மூலம் கவர்ச்சிகரமான வளர்ச்சியை தொடர்ந்தும் பதிவு செய்தது. 2015 ஓகத்தில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2014 ஓகத்துடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 265.2 மில்லியனுக்கு 18.7 சதவீதத்தால் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 2015இன் ஓகத்துவரையான காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான ஒன்றுசேர்ந்த வருவாய்கள் 2014இன் இதையொத்த காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,762.5 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,866.5மில்லியனுக்கு 17.1 சதவீதத்தால் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**

2015 யூலையில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 599 மில்லியன் தொழிலாளர் பணவனுப்பல்களின் உட்பாய்ச்சலானது 2014 யூலையில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 607 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 1.2 சதவீத சிறிதளவான வீழ்ச்சியை பதிவுசெய்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2015இன் யூலை வரையான காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2014இன் இதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4,032 மில்லியனாக விளங்கி 1.6 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்தது.

**நிதியியல் பாய்ச்சல்கள்**

2015 ஓகத்தில் அரச பிணையங்களில் காணப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் கணிசமான வெளிப்பாய்ச்சல்கள் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 217.7 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 633.9 மில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சலைத் தோற்றுவித்தன. இதற்கு கடந்த ஒரு சில மாதங்களாக தோற்றம் பெற்றுவருகின்ற சந்தைகளிலிருந்து குறுங்கால வெளிநாட்டு முதலீடுகள் கணிசமானளவிற்கு மீட்டுக் கொள்ளப்படுவதற்குக் காரணமாக விளங்கிய ஐக்கிய அமெரிக்க வட்டிவீதங்களில் எதிர்பார்க்கப்படும் உயர்வே முக்கியகாரணமாகும். இத்தாக்கம் கொழும்பு பங்குச் சந்தையுடனான பங்குரிமை மூலதனச் சந்தைகளில் உணரப்பட்டதுடன் 2015 ஓகத்து வரை ஐ.அ. டொலர் 6.4 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலை மாத்திரம் பதிவுசெய்தது. இது இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான வெளிநாட்டு முதலீடுளின் ஐ.அ. டொலர் 24.8 பில்லியன் கொண்ட (ஓகத்தில்) தேறிய வெளிப்பாய்ச்சலையும் முதலாந்தரச் சந்தைகளுக்கான ஐ.அ. டொலர் 31.2 மில்லியன் கொண்ட (யூலை வரை) தேறிய உட்பாய்ச்சலையும் உள்ளடக்கியிருந்தது. 2015 யூலைவரை பெறப்பட்ட அரசாங்கத்திற்கான நீண்டகால உட்பாய்ச்சல்களை 2014இன் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 644 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 115.3 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலை மட்டும் பெற்றுக் கொண்டதன் காரணமாக மிதமானதாகக் காணப்பட்டது.

**திரண்ட சென்மதி நிலுவை நிலைமை**

2015இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் திரண்ட சென்மதி நிலுவை 2014இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 2,016 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,205 மில்லியன் கொண்ட பற்றாக்குறையை பதிவு செய்தது.

**பன்னாட்டு ஒதுக்குகள் மற்றும் செலாவணி வீத நடத்தை**

இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2015 யூலை இறுதியில் ஐ.அ.டொலர் 6.8 பில்லியனாக விளங்கி 4.2 மாத இறக்குமதிகளுக்குச் சமனாக இருக்குமென மதிப்பிடப்பட்டதுடன் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 8.4 பில்லியனாக விளங்கி 5.4 மாத இறக்குமதிகளுக்குச் சமனாக விளங்கியது. 2015 செத்தெம்பர் 04ஆம் நாளிலிருந்து, மத்திய வங்கி செலாவணி வீதங்களைத் தீர்மானிப்பதில் உயர்ந்தளவான நெகிழ்வுத்தன்மையினை அனுமதித்தது. இலங்கை ரூபா, கொள்கை நிலை மாற்றப்பட்ட திகதியிலிருந்து 2015 செத்தெம்பர் 29 வரை ஐ.அ.டொலருக்கெதிராக 4.6 சதவீதத்தினால் தேய்வடைந்தது. எனினும், 2015 செத்தெம்பர் 29 வரையான காலப்பகுதியில் 7.2 சதவீதத்தினால் தேய்வடைந்தது. மேலும், குறுக்கு நாணயச் செலாவணி வீத அசைவுகளின் அடிப்படையில் இலங்கை ரூபா அவுஸ்திரேலிய டொலருக்கெதிராக 9.5 சதவீதத்தினாலும், யூரோவிற்கெதிராக 0.3 சதவீதத்தினாலும் உயர்வடைந்த வேளையில் இக்காலப்பகுதியில் யப்பானிய யென்னிற்கெதிராக 6.9 சதவீதத்தினாலும் ஸ்ரேலிங் பவுணுக்கெதிராக 4.7 சதவீதத்தினாலும் இந்திய ரூபாவிற்கெதிராக 3.0 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது.

**அட்டவணை 3: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு** (அ)

| வகை | யூலை 2014 (ஐ.அ.டொ மில்) | யூலை 2015 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) | சனவரி – மே 2014 (ஐ.அ.டொ மில்) | சனவரி – மே 2015 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 956.6 | 932.1 | -2.6 | 6,406.5 | 6,347.6 | -0.9 |
| இறக்குமதிகள் | 1,845.3 | 1,533.9 | -16.9 | 10,830.3 | 11,035.2 | 1.9 |
| வர்த்தக மீதி (மிகை(+)/ குறை (-)) | -888.7 | -601.8 | -32.3 | -4,423.9 | -4,687.6 | 6.0 |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 213.3(ஆ) | 279.9 | 31.2 | 1,371.2(ஆ) | 1,601.2 | 16.8 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 606.7 | 599.3 | -1.2 | 3,966.6 | 4,032.0 | 1.6 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல்கள் (தேறிய) (இ) | 36.3 | -4.8 | -113.3 | 84.3 | 40.0 | -52.6 |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள் (ஈ) | 588.7 | 155.6 | -73.6 | 4,095.0 | 1,880.6 | -54.1 |
| *இதில்,* | | | | | | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 467.8 | 83.8 | -83.1 | 1,409.7 | 631.3 | -55.2 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | 650.0 | | 1,500.0 | 650.0 | -56.7 |
| நீண்ட காலக் கடன்கள் | 116.7 | 68.3 | -41.5 | 1,118.9 | 575.3 | -48.6 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது.
(ஆ) திருத்தப்பட்டது.
(இ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(ஈ) அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான மூலதனம் மற்றும் நடைமுறை மாற்றல்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் விற்பனையிலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கத்தின் நீண்ட காலக் கடன்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.